

கலைநகர் வட்டு-வடக்கு
சித்தங்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட
அமரர்

# Dr.கஜேந்திரன் ரேணுகா

அவர்களின் சிவபதப்பேறு குறித்து வெளியிடப்பெற்ற

# நினைவுமலர்

08.02.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சமர்ப்பணம்

உதிரத்தைப் பாலாக்கி உள்ளன்போடணைத்து தலைநிமிர்ந்து
உன் மழலை வாழவைக்க
தலைகுனிந்து கோவில் குளமென்று கும்பிட்டு
ஆழாக்க நினைத்த அன்னையே
அன்புக் கனிவுடன் வாழ வைத்த மனையாளே
உற்றார் ரேணு என்றும் அண்ணி என்றும் பெயர் பொறித்த,
உம்மை வருந்தியிங்கு உள்ளம் சோர்ந்து போனாலும்
உம் நினைவாய் வாடா மலராய் இம்மலரை உம் பாதார
விந்தங்கள் வணங்கி சமர்ப்பணம் செய்தோம் ஏற்றிடுக
அங்கிருந்தும் எமக்காசி பொழிந்திடுக.

இங்ஙனம்,
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



தோற்றம்
16.08.1967

மறைவு
09.01.2010

# அமரர் டாக்டர் ரேணுகா கஜேந்திரன்

அவர்களின்

## திதி வெண்பா

ஆண்டுநல் விரோதி யாம் மார்கழி மாதத்தில்
பூண்டநல் துன்னும் துவாதசி திதி தனில்
இன்மொழிசேர் ரேணுகா அன்னை
நாதன் தாள் நாடியே பூமிதனை விட்டாள் புரிந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் காப்பு

ஓங்கார வடிவமான உன்பாதத் தாமரையும்
உபய பரிபுர மறைகளும்
உதிக்கின்ற செங்கதிர்கள் ஒருகோடி நிகரொளியும்
உந்துள நீற்றின் ஒளியும்
பாங்கார் கஜானமும் முகமதியும் வளர்புயப்
பவளா சலங்கள் நான்கும்
பாசமுடன் அங்குசம் கொம்பேரி லட்டுகம்
பட்சமொடு வைத்த கரமும்
நீங்காத அருள்மாரி பொழியும்தி ரியம்பகமும்
நிறையும் மும்மத மாரியும்
நீள்சடா யடவியும்வெண் பிறையுமொரு தொந்தியும்
நெஞ்சில் ஒருகாலும் மறவேன்
காங்கேயன் மகிழ்தமய னேகங்கை நதிபெருகு
காசி வாழ்துண் டிராச
கணபதி எனும்பெரிய குணமேரு வேஅருட்
கருணா நிதிக் கடவுளே

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவ ரென்றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினு மனத்து மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர் பானீக்கி
நுழைதரு நூலினர் ஞானம்
கோயிலும் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தாழ் உறுபுனலில் கீழ்மே லாகப்
பதைத்துருகும் அவர்நிற்க என்னையாண்டாய்க்
உள்ளந்தாள் நின்றுச்சி யளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாம் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால் நெஞ்சம் கல்லாம்
கண்ணிணையும் மரமாந்தீ வினையி னேற்கே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவள ருள்ளத் தானந்தக் கனியே
அம்பல மாடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயத்
தொண்டனே விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அளிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவா ருலகில்
ஊரும் உலகும் கழற உளறி
உமைமண வாளனுக் காட்
பாரும் விசும்பும் அறியும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
வளப்பெரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொடு மூன்றுந்
திருந்து சாத்துவிக மேயாக
இந்துவாழ் சடையா னாடு மானந்த
வெல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துட் டிளைந்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புனர்வோனே குகனேசற் குமரேசா
கறையானுக் கிளையோனே கதிர்காமப் பெருமானே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் ரேணுகா கஜேந்திரன் அவர்களின்

# வாழ்க்கைச் சுருக்கம்

ஈழவழ நாட்டின் சிரமெனத் திகழ்வது யாழ்ப்பாணம். அதன் ஒரு பகுதியான வட்டுக்கோட்டையில் அமைந்துள்ள ஊர்களில் ஒன்றே கலைநகர். கலை மலிபூரானதால் இவ்வூர் கலைநகர் என என அழைக்கப்படலாயிற்று. குல தெய்வங்களாகப் பிள்ளையாரையும், கம்பம்புலோ ஆதிவைரவரையும் வணக்க தலங்களாகக் கொண்டுள்ள சைவ மக்கள் வாழும் இவ்வூர் கலைகளோடு மட்டுமல்லாமல் சித்த வைத்தியத்திலும் சிறந்ததாகவும் இருந்து வருகின்றது.

சீர்பெறு சித்திரம், சிற்பம் சிறந்திடு
நல்சித்த ஆங்கில வைத்தியம் - என்றும்
கூத்தும் பாட்டும் குலவும் வட்டூர் - எனவும்
போற்றப்படுவதாகும்.

சித்த வைத்தியத்தில் சிறந்து விழங்கிய வைத்திய கலாநிதிகளான மு.வடிவேலு, மு.அண்ணாமலை ஆகியோரின் வம்சாவழியில் நவரட்ணம் வைத்தியர் அவர்களுக்கும் சத்திய பாமா அவர்களுக்கும் மூன்றாவது வாரிசாக வந்துதித்தவரே ரேணுகா நல்லாள். இந்நல்லாள் சிறுபராயம் தொடக்கமே கல்வியில் ஆர்வம் கொண்டு வம்சாவழி வைத்தியத்தில் மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்று ஆர்வம் கொண்டு அத்துறையில் கல்வி கற்று பட்டம் பெற்று பல இடங்களில் பேசாலை, பண்டி விருச்சான், முள்ளிப்பொத்தானை திருகோணமலை, மதவாச்சி, வவுனியா, மல்லாவி ஆகிய இடங்களில் சேவை புரியும் நிலையில் இம்மாது சிரோண்மணி தனது முப்பத்துமூன்றாவது வயதில் ஆசிரியர் திரு.தெ.கஜேந்திரன் எனும் தர்மகுணமுடைய நம்பியைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத்தலம் பற்றினார். இவர்களின் இல்லற வாழ்க்கைக்கு நலன் சேர்க்கும் வகையில் ஒரு அருமைப் புதல்வி கஜலக்சனாவைப் பெற்றெடுத்து இன்பம் கண்டனர்.

நாளும் நல்வாழ்வு கண்ட உயிர்காக்கும் உத்தம சேவையை சொந்த ஊரில் உள்ள வட்டுக்கோட்டை ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையத்தில் ஊரார் புகழ்பாட உறுதியுடன் கடமையாற்றிவரும் வேளை கொடிய நோயினால் திடீர் நோய்வாய்ப்படவே கணவனும் பிள்ளைகளும் தாயாரும் நலிவு கண்டனர். ரேணுகா அன்னையின் நல்லுயிர் நீங்கவே சோகத்துடன் ஆத்மா சாந்திக்காக இறைவனை இறைஞ்சி வேண்டி நிற்கின்றார்கள்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

"வையத்தில் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உலக வங்கியின் சுகாதார பிரிவு அபிவிருத்தித் திட்டத்தின் நிதி உதவியுடன் வட்டுக்கோட்டையில் 70 இலட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவு நிலையத்தின் கட்டடத் திறப்புவிழா 20.03.2009 இல் நடைபெற்றது. இதில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் மங்கள விளக்கேற்றுவதையும் வைத்தியசாலையின் பெயர் பலகையை மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஏ.ஞானசோதி திரைநீக்கம் செய்து வைப்பதையும் கட்டடத் திணைக்களத்தின் வட மாகாண பிரதம பொறியியலாளர் கு.குகதாசன் நினைவுக் கல்லைத் திரைநீக்கம் செய்வதையும், வடமாகாண சுகாதார சேவைகள் அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் நாடா வெட்டி கட்டடத்தைத் திறந்து வைப்பதையும் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி வைத்தியகலாநிதி திருமதி.கஜேந்திரன் ரேணுகா நோயாளி ஒருவரைப் பரிசோதிப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரையும் இப்படங்களில் காணலாம்.





மல்லாவி வைத்தியசாலையில் கடமையிலிருந்த போது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னலமற்ற சேவையால் உயர்ந்த பெருமாட்டி
**அமரர் ரேணுகா கஜேந்திரன்** அவர்கட்கு
சைவப்புலவர் அ.து.சடாட்சரசிங்கம் வழங்கிய

# இரங்கல் உரை

"ஓடும் நீத்தத்தில் உற்ற குழிழெனக்
கூடுங் காயம் கலைந்திடும் மாந்தர் காள்
ஆடுங் கூத்தரின் அற்புதத் தண்மலர்
சூடி ஏத்தித் துயர் பொடுத் தும்மினே !"

வட்டூர் மான்மியம் பேசும் சித்த நெறி பேணிக்காத்த மூத்தாள் வரிசையில் இரு மரபாளர்கள் போற்றப்படுகின்றனர். ஒருவர் வீரமாகாளர் மரபினர், மற்றயவர் கண்ணப்பா என அழைக்கப்படும் வேறு மரபினர். முத்துப்பரிகாரியின் வழிவந்திட்ட உச்சிட்ட கணபதியை தமது வாலாயத் தெய்வமாக இல்லத்தில் வைத்து வழிபட்டு மாந்திரீக வைத்திய சோதிடக் கலையில் வல்லவர்களாக கண்ணப்பா மரபினர் திகழ்ந்தனர். அண்ணாமலைப் பரியாரியார் என்றும் வடிவேலுப்பரியாரியார் என்றும் வாழையடி வாழையாக வைத்தியப் பரம்பரைக்கு வித்திட்டுள்ளனர். இவர்கள் வரிசையில் வழிவந்த பலர் ஆங்கில வைத்தியத்திலும் பாண்டித்தியம் பெற்று நாடு புகழ் வைத்திய நிபுணர்களாகவும் திகழ்கின்றனர். அவ்வாறே அமரத்துவம் எய்திய ரேணுகா அவர்களும் ஒரு ஆங்கில வைத்திய அதிகாரியான அண்ணாமலை நவரட்ணம் அவர்களின் புதல்வி ஆவார். பிறந்த மனிதர் இறப்பர் என்பது நியதி ஆனால் ஒரு சிலரின் இழப்பு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். அந்த வரிசையிலே அமரத்துவம் அடைந்த ரேணுகா கஜேந்திரனின் இழப்பும் பேரிழப்பாகும். தமது கிராமத்திற்கும் ஏனைய அயல் கிராமத்திற்கும் சேவையாற்றவேண்டிய நேரத்தில் எமை விட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிந்துள்ளார். எமது வட்டுக்கோட்டை கிராமிய சுகாதார வைத்தியசாலை நாம் அறிவறியாக் காலத்தில் ஆத்தியடிப் பிள்ளையார் ஆலயத்தின் அருகாமையிலும் அதன் பின்னர் மாவடிச் சந்தி அருகாமையிலும் இப்படியாக நிரந்தர காணி இன்றி இயங்கி வந்தது. இதனைக் கருத்தில் கொண்டு தமது சொந்த ஊரிற்கு சேவை செய்ய வருகை தந்த அமரர் அவர்கள் சேவைக்காலத்தில் வட்டுக்கோட்டைக் கிராமிய வைத்திய சாலைச் சங்கத்தின் அனுசரணையுடன் நிரந்தரக் காணி பெற்று சொந்த கட்டிடம் ஒன்றை அமைப்பித்து திறப்பு விழாவினைச் செய்துள்ளார். காலம் உள்ளவரை வட்டுக்கோட்டை ஆரம்ப சுகாதார வைத்தியசாலையில் இவர் பெயர் வாழும் எனக் குறிப்பிட்டு இவர் ஆத்மா நித்திய பேரின்ப பெருவாழ்வு பெற எல்லாம் வல்ல தெய்வன் பதி கற்பகப் பிள்ளையாரை வேண்டுகின்றேன்.

**ஓம் சாந்தி! சாந்தி!!! சாந்தி!!!**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபதம் அடைந்த அமரர் ரேணுகா கஜேந்திரன்
இணைபிரியா கணவன் அவர்களின்

# அனுதாப செய்திமடல்

**நீங்காத நினைவலைகள்**

எனது பாசமிகு மனைவியை கைத்தளம் பற்றிய காலத்தில் எனக்கு உதவியாக இருந்த மனையாள் ரேணு என செல்லமாக அரவணைக்கும் ரேணுகா அவர்களது மறைவுச் செய்தி கேட்டு ஐயந்தொடர்ந்து விழியும் சொருகி அறிவிழந்து நடைப்பிணமாகிவிட்ட எனக்கு அவரது இழப்பு ஈடு செய்ய முடியாதது.

எமது குலவிளக்கை இழந்து தனிமரமாக தவிக்கும் நிலையில் எனக்கு அருமைச் செல்வம் ஒன்றை அகத்தே விட்டுப் பாசத்துடன் வளர்ப்பதற்கு பரிந்துரையும் தந்து விட்டு தனது அன்புக் கருணையால் கணா என கனிவுடன் அழைத்து வந்த வேளையில் கண்மணியை இழந்து துன்பத்தில் துடிதுடிக் கின்றேன்.

மருத்துவத்தில் மாதாவாய் மகிழவைத்த மனை விளக்கே அணைந்த செய்தி கண்டு ஆடிய பம்பரமாய் ஆடிநிற்க வைத்துவிட்டாய்.

அமைதி காத்த அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

பிரிவால் வாடும்,

**கணவர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளம் நெக்குருகும் உறவுப் பிரிவு

அன்பிற்குரிய உடன் பிறவா சகோதரியாக,
அயலோரை ஆதரிக்கும் நண்பியாக,
வட்டூர் மக்களின் அன்பைப் பெற்றவராக,
இன்னல் பட்டு இடறுவோருக்கு உதவுபராக,
இன்முகத்துடன் மற்றவர்களை அணுகுபவராக,
ஈசன் அருள்பெற்ற மருத்துவராக
ஈடு இணையற்ற குடும்பத் தலைவியாக,
உண்மை நேர்மை கடமை உணர்ச்சியுடன்
உதவி செய்யும் உதாரண குணத்தவள் நீ,
ஊக்கமாய் உழைத்தாய் - உண்மையாய்
ஊருக்குப் பலவகையில் உபகாரம் செய்தாய்,
எளிமையாய் வாழ்ந்தாய் எதனையும் ஏற்றமாய் செய்தாய்,
ஔடதக மருந்தாகஅனைவருக்கும் உதவிய நீ,

மனித வாழ்வில் ஒவ்வொருவருக்கும் சில தனித் தனமையைப் பெற்றிருக்கின்றார்கள். இவை அனைத்தும் முடிவற்ற முற்பிறவிகளின் வினைப்பயன்களால் நிர்ணயிக்க பட்டுள்ளது. ஒவ்வொரு மனிதரும் கடந்த கால மொத்தச் சுமையுடன் இந்த உலகிற்கு வருகிறார்கள். முடிவற்ற கடந்த காலம் நிகழ்காலத்தை நிர்ணயிக்கின்றது. நிகழ்கால வாழ்வை நாம் பயன்படுத்துகின்ற விதம் எதிர்காலத்தை உருவாக்கு கின்றது. இவ்வாறு உலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும் தனிப் பாதை உள்ளது. அவர் எந்த திசையில் போக வேண்டும், எப்படி வாழவேண்டும், எவ்வளவு காலம் வாழவேண்டும் என்பது நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (சுவாமி விவேகானந்தர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் திருமதி.ரேணுகா கஜேந்திரன் அவர்களது வாழ்வு மிகக் குறுகிய காலத்தில் அஸ்தமித்துவிட்டது. திருகோணமலை, முள்ளிப்பொத்தானை, மதவாச்சி, மன்னார், பண்டிவிருச்சான், மல்லாவி, வட்டுக்கோட்டை அகிய அரசினர் வைத்தியசாலைகளில் இவர் ஆற்றிய வைத்தியப் பணிகள் மகத்தானது. சிறந்த வைத்தியராகவும் சிங்களம், ஆங்கிலம், தமிழ் ஆகிய மும்மொழிகளிலும் மிகப்புலமை மிக்கவராகவும் விளங்கிய இவரது இழப்பு எமது ஊர் மக்களிற்கும் குறிப்பாக தமிழ் சமூகத்திற்கும் ஈடு செய்ய முடியாததாகும்.

"உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்

உள்ளத்துளெல்லாம் உளன்"

இக் குறளிற்கேற்ப உள்ளத்தால் பொய்யாது வாழ்ந்து மக்களின் உள்ளத்தில் எல்லாம் இடம்பெற்ற உத்தமி திருமதி.ரேணுகா கஜேந்திரன் அவர்கள். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**ஞானானந்தராஜா தேவஞானன்**

உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவலைகள்

எமது பாசமிகு குலவிளக்காம் திருமதி.ரேணுகா கஜேந்திரன் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஐயந்தொட்டு விழியும் சொருகி அறிவிழந்து நடைப்பிணமாகி விட்ட எங்களுக்கு அவரின் இழப்பு ஈடு செய்ய முடியாதது. நாம் இடைநிலையில் தாயை இழந்து தனிமரங்களாக தவித்த பொழுது தாய்க்கு தாயாக அரவணைத்து நேசித்து பாசத்துடன் வளர்த்த அண்ணியை நாம் இனி எங்கு காண்போம்.

அன்பும் கருணையும் தயை உள்ளமும் உமது நல்லினிய குணங்களை இனி நாம் இங்கு தேடுவோமா? நீங்கள் நல்ல குடும்பத்தலைவியாக நிறை பக்தியுடன் குலதெய்வங்களை நேசித்ததோடு உயிர்காக்கும் உத்தம சீலராக ஊருக்காய் எமது நாட்டுக்காய் உழைத்து சமூக நாட்டம் கொண்ட வீராங்கனையாகவும் பல்வேறு நற்பண்புகளைக் கொண்டு சீரும் சிறப்பாக வாழ்ந்து வந்த உங்களது புன்சிரிப்பு வதனம் நினைவிழந்தது ஏனோ? ஊன்று கோலாய் நீ இருந்து எம்மை உயரவைத்த நன்றியினை எம்வேருக்குள்ளேயே தேக்கி விட்டோம் அண்ணியே. உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

பிரிவால் துயருறும்

**பாசமிகு மச்சான், மச்சாள்மார்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரு உள்ளத்திற்கு கருணை ஆசிச்செய்தி

வைத்திய அதிகாரி நவரட்ணம் அவர்களின் அன்பு மகளும் வட்டுவடக்கு கலைநகர் சித்தங்கேணியைப் பிறப்பிடமாகவும் கொண்ட தெ.கஜேந்திரன் (ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியான க.ரேணுகா அவர்கள் 09.01.2010 சனிக்கிழமை காலமான செய்திகேட்ட சகோதரிகளாகிய நாம் ஆழ்ந்த துயரத்தில் உள்ளோம். வளரும் காலத்திலிருந்து எம்முடன் கூடிக்குலவிய ஒளி விளக்கு அணைந்து விட்டதோ? கல்வியிலே கலங்கரை விளக்கம் போல் பிரகாசித்த உம் புகழ் மொட்டிலே வாடியதோ? உடன் பிறப்பான உன் உயிர் பரிந்த செய்தியை எம்மால் ஜீரணிக்க முடியவில்லையே. நீ பட்ட துன்ப வேதனையால் நாளும் துடிதுடித்த எமக்கு திடீரென நீ அணைந்து விட்டாய். உன் நல்லுயிர் நீங்கவே சோகத்துடன் ஆத்மா சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

பிரிவால் வாடும்...

**சகோதரிகள்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயன்கருதா கடமை வீரர்

வட்டுக்கோட்டை வடக்கில் 16.08.1976இல் பிறந்த திருமதி.ரேணுகா கஜேந்திரன் அவர்கள் 01.01.1996இல் நியமனம் பெற்றார். மக்கள் சேவையே தன் சேவை எனக் கருத்தில் கொண்ட மருத்துவர் அவர்கள் நோயாளிகளிடம் இன் சொல் பேசி அரவணைத்து, அவர்களின் நோய் நாடி குறை தீர்க்கும் மருத்துவராக விளங்கினார்.

வட்டுக்கோட்டை வைத்தியசாலையில் மருத்துவ அதிகாரிக்கான வெற்றிடம் இருப்பதை அறிந்து தன் பிரதேசத்திற்கு சேவை செய்ய வேண்டும் என்ற பெரு விருப்பினால் உந்தப்பெற்று நியமனம் 03.06.2006இல் பெற்றார். இவர் அதிகாரியாக வருகை தந்ததினால் நோயளர் வருகையும் அதிகரித்தது. இத்தனைக்கும் இவ் வைத்தியசாலை தனியார் கட்டிடத்திலேயே இயங்கி வந்தது கவனத்தில் கொள்ளத்தக்கது.

வட்டுக்கோட்டை பிரதேசத்திற்கான வைத்தியசாலை அமைப்பதற்கு இப்பிரதேசத்ததைச் சேர்ந்த மலேசியா வாசியான அன்பர் கருணாகரன் தன் தாயாரின் பேரில் அன்பளிப்புச் செய்த ஆறு பரப்புக் காணி சீரான நிர்வாகம் அமையப் பெறாமையால் செயல்படுத்த முடியவில்லை. ஒதுக்கப்பட்ட நிதியும் திரும்பும் நிலை ஏற்பட்டது. இவர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு இதற்கான அபிவிருத்திச் சபையைக் கூட்டுவதற்கு ஏற்பாடு செய்தார். இதன் பயனாக 21 பேர் கொண்ட செயல்குழு அமைக்கப்பட்டது. இக்குழுவின் தலைவராக இவரே செயற்பட்டார். இக்குழுவின் உதவியுடன் இக்கட்டிடத்தை (ரூபா 70 இலட்சம் பெறுமதி) நிர்வாகம் அமைந்து ஒன்பது மாத காலங்களில் கட்டி முடித்தார்.

இக்கட்டிடத்தின் திறப்பு விழாவின் போது (20.03.2009) அவர் நோய்வாய்ப்பட்டு இருந்தார். நிர்வாகம் அவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகனத்தில் ஏற்றி வந்து அவரைக் கொண்டே முதல் சிகிச்சை செய்து அவரைக் கௌரவித்தது. இச் செயலானது டாக்டர் வாழ்வில் குறிப்பிடக்கூடியதும் பெருமைப்படக்கூடியதுமாகும்.

இவர் பணியாளர்களுடனும் மேலதிகாரிகளுடனும் சகசமாகப் பழகும் இயல்பினர். இவர் பரம்பரை ஒரு வைத்தியப் பரம்பரை என்பதால் இவருக்கும் இக்குணம் இயல்பாகவே அமையப்பெற்றது எனலாம். இத்தகு சிறப்பம்சங்கள் அமையப் பெற்ற அம்மையார் அவர்கள் தனது சேவையைத் தொடர்ந்து செய்ய எமது பிரதேச மக்கள் கொடுத்து வைக்கவில்லை என்பதையே எம்மால் கூறமுடியும். எனினும் அவர் சேவை என்றும் எம்மக்கள் மனதில், வைத்தியசாலைக் கட்டிடம் உள்ளவரையும் அம்மையார் பெயர் விளங்கும்.

ஓம் சந்தி! சாந்தி!! சாந்தி!!!

**இ. கு. சிவஞானம்** ச.நி. இலங்கை
வட்டுக்கோட்டை மருத்துவப் பராமரிப்பு நிலைய
அபிவிருத்திச் சபைச் செயலாளர்

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர்
தெ.கஜேந்திரன் அவர்களின் அன்பு
மனைவி
திருமதி Dr. ரேணுகா கஜேந்திரன்
அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு
அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும்
அடைவதோடு துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

(53746)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா / கைதடி முத்துக்குமார சுவாமி ம.வி.
(நலன்புரிப் பாடசாலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேருஜி சனசமூக நிலையத்தினரதும் கிராம முன்னேற்றச் சங்கத்தினரதும்

# இரங்கலுரை

கலைநகர் வட்டு வடக்கு சித்தங்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆரம்ப சுகாதார வைத்திய பராமரிப்பு நிலைய அதிகாரி திருமதி.ரேணுகா கஜேந்திரன் அவர்கள் 09.01.2010 சனிக்கிழமை காலமானதை யிட்டு எமது கிராம மக்கள் மிகுந்த கவலை அடைந்துள்ளார்கள். இவர் ஒரு சிறந்த நற்பண்பாளர். உயிர்காக்கும் உத்தம பணியை செய்த இவர் தெய்வ பக்தி கொண்டவர்.

இவருடைய கணவராகிய திரு.தெ.கஜேந்திரன் எமது நிலையத்தில் உபதலைவராகவும், உப செயலாளராகவும் பதவி வகித்தவர். அவருடைய மாமனார் திரு.பொன் தெண்டாயுதபாணி எமது நிலையத்தில் உபதலைவராகவும், செயலாளராகவும், பொருளாளராகவும் பதவி வகித்தவர். இவர்கள் எமது நிலையம் சிறப்புற இயங்க முன்னின்று உதவியவர்கள். இவருடைய சேவைகளுக்கு அம்மையார் உறுதுணையாக இருந்துள்ளார்.

இவரது பிரிவால் வாடும் இவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**நேருஜி சனசக நிலையத்தினரும்,**
**கிராம முன்னேற்றுறச் சங்கத்தினரும்**
கலைநகர்,
சித்தங்கேணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழியருவி

பிறப்பு

16
*
08
*
1967



இறப்பு

09
*
01
*
2010

## DR.திருமதி கஜேந்திரன் ரேணுகா

வைத்திய அதிகாரி [ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையம் வட்டுக்கோட்டை]

"குடும்ப குல விளக்கை இழந்து தவித்திடும் - கஜேந்திரனே!
மண்ணின் மாயை மறைதலும்
விண்ணின் மெய்மை தோன்றலும் இயற்கையன்றோ".

## அஞ்சலி அஞ்சலி அஞ்சலி

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்க்கு எங்கள் கண்ணீரை காணிக்கையாக்குகின்றோம்.

வட்டுக்கோட்டை
வாழ் மக்களும்
வைத்தியசாலை அபிவிருத்திச்சங்க நிர்வாகிகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு

16
*
08
*
1967



இறப்பு

09
*
01
*
2010

## DR. திருமதி கஜேந்திரன் ரேணுகா

வைத்திய அதிகாரி [ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவு
வட்டுக்கோட்டை]

என்றும் பாசமிகு வைத்திய அதிகாரி
அம்மாவே
எங்களுடன் கடமை செய்த நாட்களை
எண்ணித் தவிக்கின்றோம்
அந்த நாட்கள் இனி எப்போது வரும்
என்று ஏங்கித் தவிக்கின்றோம்

கடமை, கண்ணியமாய் இருந்தீர்கள்
காலனவன் உங்கள் கடமை பொறுக்காமல்
எங்களிடமிருந்து இடையில் பறித்துக் கொண்டான்.
பொல்லாத நோய் வந்து உங்கள் மேனியை உருக்கியதோ.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

ஊழியர்கள்
ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவு
வட்டுக்கோட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மண்ணில்
1967 – 08 – 16



விண்ணில்
2010 – 01 – 09

அமரர்

## கஜேந்திரன் ரேணுகா

(வட்டுக்கோட்டை ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலைய வைத்திய அதிகாரி)

கலைநகர், வட்டு-வடக்கு சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி கஜேந்திரன் ரேணுகா (வைத்திய அதிகாரி) அவர்கள் 09-01-2010 அன்று காலமாகி விட்டார் என்ற செய்தி கேட்டு எமது கம்பம்புலோ ஆதிவைரவப் பெருமான் தேவஸ்தான நிர்வாகமும், கலைநகர் மக்களும் ஆழ்ந்த கவலை அடைந்துள்ளார்கள்.

எம்மை எல்லாம் மீளாத் துயரில் விட்டுச் சென்ற அன்னாரது பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

10-01-2010

கம்பம்புலோ ஆதிவைரவப்
பெருமான் தேவஸ்தானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மண்ணில்
1967
-
08
-
16



விண்ணில்
2010
-
01
-
09

அமரர்

# கஜேந்திரன் ரேணுகா

(வட்டுக்கோட்டை ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலைய வைத்திய அதிகாரி)

கலைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டு வட்டுக்கோட்டை ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலைய வைத்திய அதிகாரியாக கடமையாற்றி வந்த கஜேந்திரன் ரேணுகா அவர்கள் 09-01-2010 சனிக்கிழமை அன்று இறையடி சேர்ந்த செய்தி கேட்டு எமது கழகம் கலங்கி நின்றது. அன்னார் தற்பெருமை அற்றவர். கடமையை நேசித்தவர் இன்முகம் காட்டி சிகிச்சை மேற்கொள்ளும் தக்கவர் அவரது பணியை தொடர்ந்தும் எம் மக்களால் பெற்றுக் கொள்ள முடியவில்லை என்பதில் எமக்கு ஆழ்ந்த கவலையளிக்கின்றது.

அன்னாரது கணவர் எம் எல்லோரையும் அரவணைத்துக் கொள்பவர் அவர் எமது கழகத்தின் தலைவர். செயலாளர் போன்ற பல்வேறு நிர்வாக பதவிகளில் இருந்து வழிகாட்டியுள்ளார். அதேபோல் அன்னாரது மைத்துனர்களும் எமது கழகத்தில் இருந்து பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர்.

அன்புக் கணவரையும் ஆசைக் குழந்தையையும் விட்டுச் சென்ற அன்னாரது பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கலைநகர் தேசிய
இளைஞர் சேவைகள் மன்றம்.
கலைநகர் விளையாட்டுக் கழகம்

10-01-2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தத்துவ முத்துக்களும் பொன்மொழிகளும்

- ஆயிரம் மதகுருமார்களை விட நல்ல ஆசிரியர்கள் தான் சமூகத்துக்குப் பயன் உள்ளவர்கள்.

  - இங்கர்சால்

- அகிலத்தின் அணையாத விளக்காகிய அறிவுச்சுடரே மக்களுக்கு உண்மையான அணிகலன்.

  - சோக்கிரட்டீஸ்

- ஒவ்வொரு ஆண்டுக்கு 2000 பக்கம் வாசிக்க வேண்டும். அப்படிப்பட்ட மக்களைக் கொண்ட நாடுதான் உண்மையாகவே கற்றறிந்ததொரு நாடு.

  - ஐ.நாடு

- கல்வியின் பெருமை கற்றதில் அல்ல. கற்றதைச் செயலில் காட்டுவதுதில் தான் தங்கியுள்ளது.

- அறியாமல் இருப்பது தவறன்று, அறிய முடியாமல் இருப்பதே தவறு.

- மனிதப் பிறவியின் ஒரே நோக்கம் கற்றுக்கொள்வதும் அதை உணர்ந்துகொள்வதும் தான்.

- ஒரு மனிதனை அவன் சொல்லும் பதில்களால் அல்ல, கேட்கும் கேள்விகளால் எடைபோடலாம்.

- வாழும் கலைதான் அறிவு அறிவின் விஞ்ஞானத்துவம்.

- விலை மதிக்க முடியாதது தேவைப்படும் நேரத்தில் செய்யு உதவி.

- காலங்கள் உனக்காக காத்திராது காலடிச் சுவடுகள் கூட வராது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்வாழ்க்கை

- இல்லறத்தில் வாழ்பவனாகச் சொல்லப்படுகிறவன் அறத்தின் இயல்பை உடைய மூவர்க்கும் நல்வழியில் நிலைபெற்ற துணையாவான்.
- துறந்தவர்க்கும் வறியவர்க்கும் தன்னிடத்தே இறந்தவர்க்கும் இல்லறம் மேற்கொண்டு வாழ்கின்றவன் துணையாவான்.
- தென்புலத்தார் தெய்வம் விருந்தினர், சுற்றத்தார் தான் என்ற ஐவகையிடத்தும் அறநெறி தவறாமல் போற்றுதல் சிறந்த கடமையாகும்.
- பொருள் சேர்க்கும் போது பழிக்கு அஞ்சிச் சேர்த்துச் செலவு செய்யும் போது பகுத்து உண்பதே மேற்கொண்டால் அவ்வாழ்க்கையின் பண்பும் பயனும் அதுவே ஆகும்.
- இல்வாழ்க்கை அன்பும் அறனும் உடையதாக விளங்குமானால் அந்த வாழ்க்கையின் பய்பும் பயனும் அதுவே ஆகும்.
- ஒருவன் அறநெறியில் இல்வாழ்க்கையைச் செலுத்தி வாழ்வானானால் அத்தகையவன் வேறு நெறியில் சென்று பெறத்தக்கது என்ன?
- மற்றவரையும் அறநெறியில் ஒழுகச் செய்து தானும் அறம் தவறாத இல்வாழ்க்கை தவம் செய்வாரைவிட மிக்க வல்லமை உடைய வாழ்க்கையாகும்.
- அறம் என்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது இல்வாழ்க்கையே ஆகும். அதுவும் மற்றவன் பழிக்கும் குற்றம் இல்லாமல் விளங்கினால் மேலும் நன்மையாகும்.
- உலகத்தில் வாழவேண்டிய அறநெறியில் நின்று வாழ்கின்றவன் வானுலகத்தில் உள்ள தெய்வ முறையில் வைத்து மதிக்கப்படுவான்.

**- கவிஞர் கண்ணதாசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமாட்டில் குத்துவிளக்குகள்

அந்தக் குத்துவிளக்குகள் தலைமாட்டில் எரிந்து கொண்டிருக்கின்றன. அவை எரிந்தாலென்ன? அணைந்தாலென்ன? அந்தப் படுக்கையில் கிடக்கும் மனித விளக்கு அணைந்துவிட்டது.

அது எரிந்து கொண்டிருந்தவரை குத்துவிளக்கு எண்ணெய் ஊற்றிக் கொண்டிருந்தது. ஆனால் அந்த விளக்குக்கு ஊற்றும் எண்ணையை இறைவன் ஊற்றாமல் விட்டுவிட்டான்.

மானிடத்தின் சாகசம் மரணப்படுக்கையோடு நின்றுவிட்டது. மனிதன் செய்த விளக்கைப் போல் எரியாவிட்டால் பத்திரப்படுத்தக்கூடிய நிலையில் அந்த உடம்பு இல்லை. நான்கு நாட்களானால் அது நாறிப்போகும்.

நறுநெய் பூசி வைத்தாலும் அதிலிருந்து பூச்சி புழுக்கள் உற்பத்தியாவதை தடுக்க முடியாது.

- அந்த மனிதன் அந்தகாரத்தில் கிடக்கிறான்.
- ஆனாலும் அவன் தலைமாட்டில் இரண்டு விளக்குகள் எரிந்து கொண்டிருக்கின்றன.
- அழுவாரையும் சிரிப்பாரையும் அறிய முடியாத சடலத்திற்கு அந்த விளக்குகள் எந்த வகையில் உதவப்போகின்றன?
- அந்த விளக்கை ஏற்றுவதும் அணைப்பதும் உங்கள் கைகளே! உங்கள் விளக்கை ஏற்றுவதும் அணைப்பதும் எவனுடைய கைகள்?
- மெஞ்ஞானிகளும் விஞ்ஞானிகளும் இங்கேதான் யோசிக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எல்லோருடைய விளக்குகளும் அணை வேண்டியவையே. அவை எரிந்த காலத்தில் எத்தனை பேருக்கு ஒளிகாட்டின என்பதே முக்கியம்.
- சத்தியம் என்ற தாம்பாளத்தில் உங்கள் விளக்கை ஏற்றி வையுங்கள்.
- குருடர் அல்லாதவர்களுக்கு அவை வழிகாட்டிடும்.
- ஒரு கோவணத்தைக்கூட நீங்கள் கொண்டு வந்ததில்லை.
- உங்கள் உடம்பில் உள்ள தோல் கூட யாருக்கும் கோவணமாகப் போவதில்லை. நிலையாமையே நிலையானது என்பதை அவனது மரணப்படுக்கை காட்டுகிறது.
- அந்தச் சடலத்தை நீங்கள் நன்றாகப் படித்துக் கொள்ளவே அந்தக் குத்துவிளக்குகள் எரிகின்றன.
- பிறந்த விளக்கு அணைந்து கிடப்பதைச் செய்யப்பட்ட விளக்குகள் காட்டிக் கொண்டிருக்கின்றன.
- மரணத்தில் அடங்கியுள்ள தத்துவத்தை அவை பறைசாற்றுகின்றன.
- எதையும் மறுக்கும் நாத்திகனே. மரணத்தையும் மறுத்துப்பாரேன் பார்க்கலாம்.

அத்தமும் வாழ்வு மகத்துமட்டே! விழியம் பொழுக
மெத்திய மாதரும் வீதிமட்டே விம்மி விம்மியிரு
கைத்தல மேல் வைத்தழு மைந்தருஞ்சுடு காடுமட்டே
பற்றித் தொடரு மிருவினைப் புண்ணிய பாவமுமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்
நிலையில்லாக் காரியத்தை நிறுத்த வேண்டாம்
நஞ்சுடன் ஒருநாளும் பழகவேண்டாம்
நல் இணக்கம் இல்லாரோடு இணங்க வேண்டாம்
அஞ்சாமல் தனிவழியே போக வேண்டாம்
அடுத்தவரை ஒருநாளும் கெடுக்க வேண்டாம்
மஞ்சாரும் குறவருடைய வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே

- உலக நீதி

# ஆலயத்தோடு உடலை ஒப்பிடும் முறை

| | | |
|---|---|---|
| பாதங்கள் | - | முன் கோபுரம் |
| முழங்கால் | - | ஆஸ்தான மண்டபம் |
| துடை | - | நிருத்த மண்டபம் |
| தொப்புள் | - | பலிபீடம் |
| மார்பு | - | மஹாமண்டபம் |
| கழுத்து | - | அர்த்த மண்டபம் |
| சிரம் | - | கர்ப்ப கிரஹம் |
| வலது செவி | - | தஷாணாமூர்த்தி |
| இடது செவி | - | சண்டிகேசுவரர் |
| வாய் | - | ஸ்நாப மண்டப வாசல் |
| மூக்கு | - | ஸ்நபந மண்டபம் |
| புருவமந்தி | - | லிங்கம் |
| தலையின் உச்சி | - | விமானம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயனுள்ள மருத்துவ குறிப்புகள் சில...

01. எதிர்ப்பு சக்தி குறைவுக்கு வேப்பங்கொழுந்து துவையல், காசநோய்க்கு தூதுவழைக்காய் வறுவல், தோல் சுருக்கத்திற்கு வெந்தய இட்லி, மார்பக வளர்ச்சிக்கு வாழைப் பொத்தித் துவையல், தாய்ப்பால் சுரக்க முட்டைக்கோஸ்சூப், கர்ப்பப்பை புற்றுநோய்க்கு வல்லாரைத் துவையல், வெள்ளைப்போக்குக்கு நீத்துப பூசணிக்காய்ச் சாம்பார், முகப் பருவுக்கு பப்பாசிப் பாயாசம், முடி உதிர்வுக்கு கரிசாலைதுவரைக்கறி.

02. சுக்கும் கருப்பட்டியும் சேர்த்து குடிநீராக்கி குடித்துவர உடல் தளர்ச்சி நீங்கும் நன்கு பசி எடுக்கும்.

03. சுக்கு (வேர்க்கொம்பு) சிறிது உப்பு சேர்த்து அரைத்துச் சாப்பிட வாயு ஓங்காளம், இரைச்சல் தீரும் பசி எடுக்கும்.

04. முருங்கைக் கீரையுடன் கச்சானைச் சேர்த்து சமையல் செய்தால் "பாதாம் பருப்பின்" சத்து இருக்கும்.

05. வல்லாரை இலைகள் ஐந்துடன் மிளகு மூன்று சேர்த்து மென்று காலை, மாலை வெறும் வயிற்றில் சாப்பிட்டுவர மூலம் குணமாகும்.

06. வெள்ளரிப்பிஞ்சால் சிறுநீரகத்தைக் காக்கலாம். வெந்தயத்தால் வெள்ளைப் போக்கைக் காக்கலாம்.

07. மண் சட்டியில் வேப்பிலைகளைப் போட்டு வாயை மூடி நன்கு சாம்பலாகும்வரை அடுப்பில் வைத்துவிடவும். சாம்பல் ஆனதும் பொடி செய்து மூன்று கிராம் எடுத்து ஐந்து கிராம் தேனில் குழைத்துச் சாப்பிட வயிற்றுப் புண் நீங்கும்.

08. அன்னாசிப் பழத்தைத் தேன் தோய்த்து நாற்பது நாட்கள் மதிய உணவுடன் சாப்பிட்டுவர உடல் நல்ல பலம் பெறும்.

09. தாய்ப்பால் அதிகமாகச் சுரக்க பாலூட்டும் தாய்மார்கள் அதிகம் எள்ளை உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

10. நீரிழிவு நோய்க்கு 100 கிராம் எள்ளுப் புண்ணாக்கு, முருங்கைக் கீரை இரண்டையும் உலர்த்தி பொடி செய்து தினமும் இரண்டு கிராம் அளவு மூன்று நேரம் சாப்பிட்டுவர நோய் குணமாகும்.

11. குப்பைக் கீரையை பருப்புடன் சேர்த்து சாப்பிட்டுவர உடல் அழலைப் போக்கும். இதனை கஷாயமாக்கி குடித்துவர நீரடைப்பு, சரியாகி வரும். கீரையின் வேரை சுட்டுச் சாம்பலாக்கி பெரிய கட்டிகள் மேல் தடவ கட்டிகள் உடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. சிறு குழந்தைகள் தொடர்ந்து அழுதுகொண்டே இருப்பார்கள். அடிக்கடி மலம் கழிப்பார்கள். திடீர் திடீரென பயந்து அலறுவார்கள். தூக்கத்தில் பயந்து அழுவார்கள். இதற்கு துளசி சாற்றினை உடல் முழுவதும் தடவுங்கள். 50 கிராம் சாம்பிராணி, 50 கிராம் கழுதையின் காய்ந்த மலம் இரண்டையும் கலந்து புகைகாட்டி குழந்தைகளின் சகல நோய்களும் இனம்புரியாத காரணங்களால் உண்டாகும் நோய்களும் நீங்கும்.

13. கரிசாலங்கண்ணி இலையை அரைத்து பசும்பால் கலந்து காலை மாலை வெறும் வயிற்றில் சாப்பிட காமாலை தீரும்.

14. கீரை உணவை பகலில் மட்டும் சாப்பிட வேண்டும். இரவில் சாப்பிடக் கூடாது. கீரையை நெய் விட்டு சாப்பிடுவது நல்லது.

15. ருசியும் மணமும் உள்ள கொத்தமல்லி கீரையை கருவேப்பிலை மிளவு, புளி, உப்பு, வெங்காயம், உள்ளி என்பவற்றுடன் அரைத்து நல்லெண்ணெயில் தாளித்து உணவுடன் சாப்பிட பித்தநோய், வாந்தி, குமட்டல் என்பன நீங்கும்.

16. வைத்தியம் செய்பவர்கள் பொய், களவு, காமம், சூது, துரோகம் இவைகள் செய்யாது கோபத்தை விட்டு ஞாபகத்தைப் பார்த்து வேதாந்த சத்துருவை நிதமும் பூஜைசெய்து தர்மமான முறையில் பணியாற்றினால் வைத்தியம் சித்திக்கும்.


17. அம்மை, வைசூரி வீட்டில் யாருக்கும் வந்தால் இந்த நோய் மற்றவர்களுக்குப் பரவாமல் இருக்க தாழை விழுதை தட்டிச்சாறு எடுத்து நான்கு மடங்கு சக்கரையுடன் கலந்து காய்ச்சி மூன்று வேளை சாப்பிட தொற்றுநோய் அணுகாது.

18. பாக்கு வெற்றிலை சுண்ணாம்பு இலைகளுடன் ஏலம், கிராம்பு, வால்மிளகு, சாதிக்காய், சாதிப்பத்திரி சுக்கு, காய்ச்சுக்கட்டி இவைகளைச் சேர்த்து தாம்பூலம் தரிக்க வேண்டும். தாம்பூலம் தரிக்கும் போர் பாக்கைப்போட்டு வெற்றிலையின் கராம்பு, நரம்பு, நுனி ஆகியவற்றை நீக்கியபின் வெற்றிலையில் சுண்ணாம்பு தடவி முன்சொன்ன பொருள்களுடன் வெற்றிலை போட வேண்டும். பாக்கை முதலில் சுவைக்கின்ற போது பாக்கில் துவர்ப்பு நாக்கின் நுன்னிய துவாரங்களை சுருக்கி எச்சில் ஊறாமல் செய்யும் பாக்கை அதிகமாக உபயோகிக்க மலச்சிக்கல் நிவர்த்தி ஆகும். மதிய நேரத்தில் உணவு உண்டபின் வெற்றிலையுடன் சுண்ணாம்பு தடவி வெற்றிலை போட்டால் உணவு செமிபாடு அடையும். இரவில் வெற்றிலை போட்டால் வாயில் நறுமணம் இருப்பதால் துர்நாற்றம் இராது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு"**

எங்களின் அன்புத் தெய்வமாகவும் நல் வழிகாட்டியாகவும் எங்களோடு இரண்டறக் கலந்து வாழ்ந்துநின்று எங்களைப் பிரிவுத் துயரில் ஆழ்த்திவிட்டு இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்ப குலவிளக்கின் பிரிவுத் துயரின்போது அருகில் இருந்து ஆறுதல் மொழி கூறியோருக்கும் அன்புக்கரம் நீட்டி அரவணைத்த அன்புள்ளங்களுக்கும் வெளிநாடுகளில் இருந்தும் அயலூர்களில் இருந்தும் தொலைபேசி மூலமும் நேரிலும் தபால் மூலமும் அஞ்சலிச் செய்திகள் அனுப்பியோருக்கும் மலர்வளையம் சாற்றி அஞ்சலி செய்தோருக்கும் இன்னும் பலவழிகளில் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் பல கருமங்களின் மத்தியிலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய வைபவங்களில் கலந்துகொண்டுள்ளவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**நன்றி.**

கலைநகர், வட்டு வடக்கு,
சித்தன்கேணி.

இங்ஙனம்,
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.

எதை நீ படைத்திருக்கிறாய்,
அதை வீணாக்குவதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்து எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவனுடையதாகிறது
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்
இந்த மாற்றமே உலக நியதியாகும்.




சரவணபவா ஓவ்(f)செற் பிறின்ரேச[illegible]ாசிட்டிசி[illegible]ன கட்டிடம், சங்கானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org